கூட்டுறவுத் தேர்தல்கள் - 2023

மிக அவசரம்

தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18

அனுப்புநர்
திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப.,
ஆணையர்,
தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின்
தேர்தல் ஆணையம்,
273 அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை – 600 018.

பெறுநர்
மாநில தேர்தல் ஆணையர்,
தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்,
சென்னை.

ந.க. 1436/2022/ கூதே.5 (1) நாள் : 20.12.2022

ஐயா,

பொருள்: கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் 2023 – நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்/துணைத்தலைவர் தேர்தல்கள் - உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத் தேர்தல்களில் முன்பு பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகள் - வழங்குதல் - தொடர்பாக.

******

தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான 2018 ஒட்டுமொத்த தேர்தல் (Enmasse Election 2018) நடைபெற்று 5 ஆண்டுகாலம் ஏப்ரல் 2023-ல் முடிய உள்ள நிலையில் அவற்றிற்கான ஆரம்பகட்டப் பணிகளை ஆணையம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

2013 மற்றும் 2018 கூட்டுறவுச் சங்க ஒட்டுமொத்த தேர்தல்களின் போது பொது தேர்தல்களில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகளே மாநிலத் தேர்தல் ஆணையத்திடமிருந்து பெற்று பயன்படுத்தப்பட்டன.

அத்தேர்தல்களில் தேவைப்பட்ட வாக்குப்பெட்டிகளை, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் வழங்கிட தங்களால் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்களும் தங்களுக்குத் தேவைப்படும் வாக்குப் பெட்டிகளைப் மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

தற்போது மார்ச் 2023, ஏப்ரல் 2023-ல் நடைபெற உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களுக்கும் இந்த வாக்குப் பெட்டிகளே பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்ட அளவிலும் தேவைப்படும் வாக்குப் பெட்டிகளை, கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்ட தேர்தல் அலுவலர்கள், மாவட்ட நிர்வாகத்திடமிருந்து பெற்றுக் கொள்ள உரிய அறிவுரைகள் வழங்கிட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை தங்களது கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுள்ள இதர 14 துறைத் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் அவர்களுக்குத் தேவைப்படும் வாக்குப்பெட்டிகளை மாவட்ட நிர்வாகம் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒம்/-
ஆணையர்

ஆணையருக்காக

20.12.2022

நகல் :

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் / மாநிலத் தேர்தல் அலுவலர்.
2. இதர செயற்பதிவாளர்கள் / மாநிலத் தேர்தல் அலுவலர்கள்
3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.